# இரு மகன்களின் மனமாற்றம்!

**முன்னுரை**

இறையிரக்கத்தின் யூபிலி ஆண்டிலே இருக்கிறோம். "இந்த யூபிலி ஆண்டில் வரும் தவக்காலம் கடவுளின் இரக்கத்தை அனுபவிக்கவும் கொண்டாடவும் உதவும் தனிச்சிறப்பு நேரமாக அர்த்தமுள்ள முறையில் வாழப்பட வேண்டும் (இறையிரக்கத்தின் திருமுகம் 17) எனத் திருத்தந்தை பிரான்சிஸ் அழைப்பு விடுக்கின்றார். எனவே, இறையிரக்கத்தையும் மன்னிப்பையும் 'கொண்டாடும்' இறை இரக்கத்திற்கென அர்ப்பணிக்கப்பட்ட மூன்று உவமைகளான 'காணாமற் போன ஆடு, தொலைந்த நாணயம், இரு மகன்களின் தந்தை' (காண். லூக் 15:1–32) ஆகியவற்றுள், இரு மகன்களின் தந்தை உவமையை (காண். லூக் 15:11–32) 'மனமாற்றம்' எனும் கண்ணோட்டத்தில் விவரிக்க முயல்கின்றது இக்கட்டுரை.

## 1. இளைய மகனின் மனமாற்றம்

இளைய மகனின் மனமாற்றம், அவன் தந்தையை விட்டு தொலைவில் இருந்த போது, பன்றி மேய்க்க வயல் வெளியில் இருந்த போது, உணவுக்கும் வழியின்றி இருந்த போது ஏற்படுகின்றது. அவன், தான் பாவம் செய்துவிட்டதை உணருகின்றான் (வச. 18). அதன் விளைவாக, மகன் என்ற தகுதி தனக்கு இல்லாமல் போய்விட்டது என்பதையும் ஏற்றுக்கொள்கின்றான் (வச. 19அ). எனவே, இங்கு அவன் உரிமை கொண்டாட விருப்பமில்லை, தந்தையின் இரக்கத்தை கெஞ்சி மன்றாடுகின்றான். அவருடைய கூலியாள்களுள் ஒருவனாக ஏற்றுக்கொள்ளும்படி மன்றாடுகின்றான் (வச. 19ஆ). இயேசுவின் காலத்தில் இருவகையான கூலியாட்கள் இருந்தனர். முதலாவது வகையினர் ஊரில் வேற்று இடத்தில் தங்கி காலையில் தலைவனது வீட்டிற்கு வந்து, வேலை செய்துவிட்டு, மாலையில் தங்கள் வீடுகளுக்கு திரும்புபவர்கள் (காண். மத் 20:1). அவர்களுக்கு நாள் சம்பளமே கொடுக்கப்படும். இரண்டாம் வகையினர், தலைவனது இல்லத்திலேயே தங்கி வேலை செய்பவர்கள். அவர்களுக்கு நாள்கூலிகளைவிட இன்னும் அதிக உரிமைகள் இருந்தன (காண். மத் 24:45–51). ஊதாரி மைந்தன் முதலாம் வகை வேலையாளாக இருக்கவே விரும்பினான். ஏனெனில் தந்தையின் இல்லத்தில் வாழ்ந்து, அவரது சொத்தை அனுபவிக்க தனக்கு எத்தகைய உரிமையும் இல்லை, அவரது முகத்தைப் பார்க்கவும் தனக்கு தகுதியில்லை என ஏற்றுக்கொள்கின்றான். தனக்கு உள்ள 'தகுதியெல்லாம்' அன்றன்றைக்கு தான் செய்யும் வேலைக்கான 'சம்பளமே' என்று எண்ணித்தான் தந்தையிடம் வருகின்றான். மகனின் இந்த தீர்மானத்திலும் செயல்பாட்டிலும் அவன் தனது பாவத்தை உணர்ந்துவிட்டதையும், மன்னிப்புக் கேட்க தயாராக இருப்பதையும், மகனுக்குக் கீழான வேலையாளாக இருப்பதை தண்டனையாக ஏற்றுக் கொள்ளவும் தயாராக இருப்பதையும் வெளிப்படுத்துகின்றது. ஒப்புரவு அருளடையாளத்தை அணுகும் ஒவ்வொரு நம்பிக்கையாளரின் மனநிலையும் இப்படித்தான் இருக்க வேண்டும்.

இத்தகைய மனநிலையோடு திரும்பி வந்த மகனை தந்தை எப்படி நடத்தினார் என்பதை 20 முதல் 24 வரையிலான வசனங்கள் விவரிக்கின்றன: "அவர் தந்தை அவரைக் கண்டு, ஓடிப்போய் அவரைக் (மகனை) கட்டித் தழுவி முத்தமிட்டார்" (வச. 20). ஆக, மகன் "புறப்பட்டுத் தம் தந்தையிடம் வந்தார்" (வச. 20அ) எனும் ஒரு செயலுக்கு தந்தை 'கண்டு', 'பரிவு கொண்டு', 'ஓடி', 'கட்டித் தழுவி', 'முத்தமிடுதல்' எனும் அய்ந்து செயல்களை ஆற்றுகின்றார். அடுத்து, மகன் தன் தந்தையிடம் சொல்ல வேண்டும் என்று தயாரித்த வசனங்களைச் (வச 18–19) சொல்லத் தொடங்குகின்றான் (வச. 21). ஆனால் தந்தை அவனை அதை முழுவதுமாகச் சொல்ல விடவில்லை, அதை இடையிலேயே நிறுத்தி விடுகின்றார். அவன் சொல்லி முடித்தபிறகு மன்னிக்க வேண்டும் என்ற பொறுமையும் இல்லை. அவனுடைய நீண்ட பாவ அறிக்கை அவருக்கு தேவையில்லை. அவனை அவர் உடனடியாக மன்னித்துவிடுகின்றார். மூன்றாவதாக, திரும்பி வந்த மகன் எதிர்பார்த்ததெல்லாம் நாள் கூலியாக தான் நியமிக்கப்பட்டாலே போதும் என்பதுதான். ஆனால் தந்தை அவனை மகனின் நிலைக்கு உயர்த்துகின்றார். அவருக்கு அவன் மகனாயிருந்தான், சொத்தை பிரித்துச் சென்றுவிட்டான், எனவே சட்டப்படி அவன் மகனல்ல என்ற விவாதமும் எண்ணமும் எழவில்லை. அவரைப் பொறுத்த மட்டில் அவர் தந்தை, தன் மகனுக்கு எப்போதுமே தந்தையாக இருப்பார். அவர் மகன் எப்போதும் அவருக்கு மகனாகவே இருப்பான். இவ்வாறு அவர் தன் தந்தை நிலைக்கும், தன் மகனுக்கும் விசுவாசமாய் விளங்கினார். எனவே மனமாற்றம் ஒரு கொண்டாட்டமாகின்றது. ஒப்புரவு அருளடையாளம் வழங்கும் அருள்பணியாளர்கள் இத்தகைய இறைத் தந்தையின் பிரதி பிம்பங்களாக இருக்க வேண்டும் என்பது நம் திருத்தந்தையின் எதிர்பார்ப்பு (காண். இறையிரக்கத்தின் திருமுகம், எண் 17).

## 2. மூத்த மகனின் மனமாற்றம்?

இளைய மகனின் மனமாற்றம், தந்தை அவனை ஏற்றுக் கொள்ளல், இவற்றுடன் உவமை முடிந்துவிடவில்லை. அது தொடர்கின்றது. இயேசு இப்போது கவனத்தை மூத்த மகனின்மீது திருப்புகின்றார். இளைய மகனின் மனமாற்றத்தை முடித்து வைத்த மகிழ்ச்சியான கொண்டாட்டம் மூத்த மகனைப் பற்றிய கதைக்கு தொடக்கப் புள்ளியாய் அமைகின்றது.

வயலிலிருந்து வந்த மகன், ஆடல் பாடலின் காரணத்தை அறிந்த போது சினம் கொள்கின்றான். தந்தை இளைய மகனை மகனாக ஏற்றுக் கொண்டது மட்டுமல்ல, செய்தி சொன்ன ஊழியனும் அதை ஏற்றுக்கொண்டார். அவருடைய பார்வையிலும் இளைய மகனை 'உன் தம்பி' என்றும் தந்தையை 'உன் தந்தை' (வச. 27) என்றே அழைக்கின்றார். ஆனால் மூத்த மகன் தன்னுடைய வாதம் எதிலும் (வச. 29–30) 'என் தம்பி' என்றோ 'தந்தையே' என்றோ கூறாதது அவனது மனநிலையைக் காட்டுகின்றது. மாறாக, இளைய மகனை 'உன் மகன்' (வச. 30) என்று கூறுவது அவனுக்கு உள்ள வெறுப்பைக் காட்டுகின்றது.

உவமையின் தந்தை இளைய மகன் திரும்ப வந்த போது ஓடிச் சென்றது போலவே, இப்போது மூத்த மகனிடமும் ஓடிச் செல்கின்றார் (வச. 28), அவனை உள்ளே வருமாறு கெஞ்சிக் கேட்கிறார் (வச. 28). திருத்தந்தை இதைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'அவனுடைய நிலைப்பாடு கடுமையானது, அநீதியானது, பொருளற்றது' என்பதை விளக்குவதற்காக சென்றதாகக் கூறுகின்றார் (காண். இறையிரக்கத் திருமுகம் 17).

மூத்த மகனின் வாதமெல்லாம் நீதியின்படி அமைந்துள்ளது. அவனது எண்ணப்படி அவன் நம்பிக்கையும் கீழ்ப்படிதலும் உள்ளவனாக இருந்த தனக்கு இத்தகைய கொண்டாட்டம் ஏதுமில்லை, தவறு செய்து சொத்தை அழித்தவனுக்குக் கொண்டாட்டமா? கீழ்ப்படிதலுக்கு கைம்மாறு இல்லை, கீழ்ப்படியாதவன் எல்லாவற்றையும் அனுபவிப்பதா? தந்தை தன்னுடைய நிலைப்பாட்டை விளக்குகின்றார். அவர் நீதியை மறுக்கவில்லை: 'நீ எப்போதும் என்னுடன் இருக்கிறாய்; என்னுடைய– தெல்லாம் உன்னுடையதே' (வச. 31). உண்மையில் அதிகம் அனுபவித்தவன் மூத்த மகன்தான். ஏனெனில் தந்தையோடு இருப்பதுதான் பேரானந்தம், அவரின் அனைத்துக்கும் உரிமை உடைய மகன். இளைய மகனோ இந்த 'தந்தையின் இருத்தலை' அவன் இழந்திருந்தான், மகன் எனும் உரிமையை இழந்திருந்தான். அவனுக்குத்தான் அதிகம் இழப்பு, மூத்த மகனுக்கு அல்ல என்பது தந்தையின் முதல் வாதம்.

இரண்டாவதாக, மேலே குறிப்பிட்டது போல, 'தந்தை எப்போதும் தந்தையாகவே இருக்கின்றார்.' மூத்த மகனுக்கும் தந்தையாக இருக்கிறார். எனவே அவனை 'மகனே' (வச. 31) என்று அழைக்கின்றார். இதே ஒரு நிலைப்பாட்டை மூத்த மகனையும் எடுக்கச் சொல்கின்றார். அவன் இளைய மகனுக்கு 'அண்ணன்', இளையவன் அவனுக்கு 'தம்பி' என்பதை நினைவுபடுத்துகின்றார். 'உன் தம்பி இவன்' (வச. 32) என்று குறிப்பிடுகின்றார். தான் தந்தையாக நடந்து கொண்டது போல, அவன் தம்பிக்கு அண்ணனாக இருக்க அழைக்கின்றார். இவ்வாறு 'அப்பா – அண்ணன் – தம்பி' எனும் உறவு நிலைக்குள் வீட்டிற்குள் – தந்தை அவனை அழைக்கின்றார். இயேசு இந்த உவமையை மூத்த மகனின் வாதத்திற்கு (வச 29–30) தந்தையின் பிரதிவாதத்தோடு (வச 31–32) முடித்துக் கொள்கின்றார். தந்தை கெஞ்சிக் கேட்டுக் கொண்டதற்கு மூத்த மகனின் பதில் என்ன? அவன் வீட்டிற்குள் வந்தானா? தந்தையையும், தம்பியையும் ஏற்றுக் கொண்டானா? என்பதெல்லாம் இன்று வரை விடை கூறப்படாத வினாக்களாக தொக்கி நிற்கின்றன. எனவே உவமை முடியும் போது இளைய மகன் மனம்மாறியது உறுதியாக்கப்பட்டு விட்டது, மூத்த மகனின் மனமாற்றம் எதிர்பார்க்கப்படுகின்றது.

## இறுதியாக

இறையிரக்கத்திற்கென அர்ப்பணிக்கப்பட்ட இந்த யூபிலி ஆண்டில் பாவ நிலையில் உள்ளோரின் உண்மையான மனமாற்றம் மிக அவசியம். அவர்கள் இறையிரக்கத்தைக் கண்டடைய வேண்டும். அதோடு தங்களை 'கீழ்ப்படிதலுள்ளவர்கள்,' 'நீதியின்படி நடப்பவர்கள்' என்று எண்ணிக் கொண்டு அடுத்தவரை தீர்ப்பிட்டு முணுமுணுப்பவர் (காண். லூக் 15:2) களின் மனமாற்றமும் மிக அவசியம் என்பதையும் உணர வேண்டும். இவை இரண்டுக்கும் மேலாக இறைத் தந்தையிடமிருந்து ஊற்றெடுக்கும் இறையிரக்கம் எனும் பேராற்றிலிருந்து எத்தனை பேர் முகந்து கொண்டாலும், இந்த ஆறு எப்போதுமே வற்றாது (காண். இறையிரக்கத்தின் திருமுகம் 25) என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். ஏனெனில் ''என்றும் உள்ளது அவரது பேரன்பு'' (திபா 136).

**அருள்பணி. A. ஜான் பாப்டிஸ்ட்**